பிரசாத் ஆர்ட் பிக்சர்ஸ்

கண் நிறைந்த கணவன்

தயாரிப்பு
ஸ்ரீமதி கிருஷ்ணவேணி

டைரக்ஷன்
T. பிரகாஷ் ராவ்

நடிகர்கள் :

A. நாகேஸ்வரராவ் ...	வேணு
ஜமுனா ...	ராதா
கிரிஜா ...	சுகுணா
கும்மடி ...	ஜமீன்தார்
C. S. R. ...	குழந்தைவேலு
R. நாகேஸ்வரராவ் ...	ராஜேந்திரன்
ரேலங்கி ...	பரமானந்தம்
ரமண ரெட்டி ...	கருப்பையா

தயாரிப்பு :

ஸ்ரீமதி கிருஷ்ணவேணி

டைரக்ஷன் :	கேமரா :	ஸ்டுடியோ :
T. பிரகாஷ்ராவ்	**வின்ஸன்ட்**	**விஜயா & வாஹினி**

மூலக்கதை ...	சதாசிவ பிரம்மம்
வசனம் ...	புரட்சிதாசன்
பாடல்கள் ...	குயிலன், புரட்சிதாசன் சுப்பு ஆறுமுகம்
சங்கீதம் ...	T. சலபதிராவ்
பின்னணி பாடியவர்கள்	T. M. சௌந்திரராஜன் P. சுசீலா, ஜிக்கி கண்டசாலா, ராகவன் ஸ்ரீனிவாசன், ஜானகி

M. R. A. புரொடெக்ஷன்ஸ் அளிக்கும்

பிரசாத் ஆர்ட் பிக்சர்ஸாரின்

கண் நிறைந்த கணவன்

கதைச் சுருக்கம்

அன்று கல்லூரியின் ஆண்டு நிறைவு விழாவிற்கு ஜமீன்தார் தலைமை வகித்தார். கல்லூரி மாணவ மாணவிகளின் மாறு வேடப் போட்டியில், ஜமீன்தார் மகள் ராதாவை, வேணு என்ற இளைஞன் தோற்கடித்து ஜமீன்தாரின் நன்மதிப்பிற்கு ஆளானான். ராதாவும் வேணுவும் ஒருவரையொருவர் காதலித்தனர். இதைக் கண்டு மகிழ்ந்தார் ஜமீன்தார்.

கருப்பையா வேணுவின் மாமன், இயற்கையில் கஞ்சனாய் இருந்தும், வேணுவை அதிகம் படிக்கவைத்ததின் நோக்கம் அவன் திருமணத்தின் மூலம் நிறையச்சீதனம் பெறலாம் என்பதே. வேணுவின் மாமன் மகளாகிய சீதாவிற்கு வெகு நாட்களுக்கு முன்பே திருமணம் ஆகியும் திருமண சமயத்தில் நடந்த சீர் வரிசைத் தகராறு காரணமாய் கணவன் வீடு செல்லாமலிருந்தாள். கற்றவன் வேணு பார்த்துக்கொண்டிருப்பானா? கடிதமெழுதி சீதாவின் கணவன் பரமானந்தத்தை வரவழைத்து மாமனார் வீட்டிலே தங்கும்படி செய்தான்.

சுகுணா — வேணுவின் தங்கை. கருப்பையா காலங்கடந்த கிழத்திற்கு மணம் பேசினார் — இதை விரும்பாத சுகுணா வாழ்வதைவிட சாவதேமேல் என்று எண்ணி தற்கொலை செய்துகொள்ள எத்தனித்தாள். அத்தருணத்தில், அவளைக் காப்பாற்றி, வாழவைப்பதாக வாக்குறுதி தந்து மணமாலை சூட்டி, மகிழ்ந்தான் ஜமீன்தாரின் எஸ்டேட் மானேஜரான குழந்தைவேலுவின் மகன் ராஜேந்திரன்.

வேணுவின் ஏழ்மை நிலையை எண்ணி, ஜமீன்தாரின் மனைவி சௌந்தரம் தன் மகளை வேணுவிற்கு மணம் புரிவிக்க விரும்பாது தன் எஸ்டேட் மானேஜர் மகன் ராஜேந்திரனுக்கு மணம் புரிந்து வைக்கத் திட்டமிட்டு, அவனை நகரத்திலிருந்து அழைத்துவர குழந்தைவேலுவை அனுப்பிவைத்தாள். ஜமீன்தார் மகளோடு உல்லாசமாய் வாழலாம் என்ற செய்தி கேட்ட ராஜேந்திரன் — சுகுணாவை ஏமாற்றிவிட்டு, ஜமீன்தாரின் வீட்டிற்கு வந்தான்.

இதற்கிடையில் ராதா, வேணு திருமணம் ஜமீன்தார் முயற்சியால் சிறப்புற நடந்தேறியது. இதைக் கண்ட குழந்தைவேலு இதற்குப் பழிக்குப்பழி வாங்குவதாகச் சபதமிட்டான்.

குழந்தைவேலுவை, எஸ்டேட் மானேஜர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அப்பதவியில் வேணுவை நியமித்தார் ஜமீன்தார். இதனைக் கண்ணுற்ற குழந்தைவேலுவின் மனம் மேலும் குமுறியது.

ராஜேந்திரனால் ஏமாற்றப்பட்ட சுகுணா, ஒரு நாடகக் கம்பெனியில் சேர்ந்து, அவனைத் தேடுவதில் ஈடுபட்டாள். இறந்ததாக நம்பப்பட்ட தன் தங்கை விலைமகள் வேடத்தில் நடிப்பதைக் காண நேர்ந்த வேணு மனம் பதறினான். தன்னுடன் நாடகம் பார்த்துக் கொண்டிருந்த தன் மனைவி ராதாவை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, தன் தங்கையின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து, அவளிடமிருந்து ஒரு புகைப்படத்தையும் பெற்றுக்கொண்டு வெளியேறினான். இதைக் கண்ட ராதா, தன் கணவன், தவறான வழிகளில் செல்கிறான் என நினைத்துக்கொண்டு இல்லம் அடைந்தாள்.

ஜமீன்தார் உடல் நலமில்லாமல் படுத்திருந்தார். வெளியூரில் இருக்கும் தன் தங்கைக்கு ரூபாய் பத்தாயிரம் கொண்டுபோய்க் கொடுக்கும்படி சொன்னார் வேணுவிடம். பத்தாயிரம் ரூபாயை வேணு எடுத்துச் சென்றதை அறிந்த குழந்தைவேலு சௌந்திரத்திடம் கூறுகிறான். காதலி சுகுணாவிற்கு, காதலன் வேணு காணிக்கை கொண்டு செல்கிறான் என்று கருதினாள் ராதா. கண்ட வழிகளில் பணத்தைத் தான்தோன்றித் தனமாய் செலவு செய்கிறான் என்று கருதினாள் சௌந்திரம்.

ஜமீன்தாருக்கு விபத்து நேருகிறது. தனது சொத்தை இரு பகுதியாகப் பிரித்து வேணுவிற்கும், ராதாவிற்கும் கொடுக்கத் திட்டமிடுகிறார். ஆனால் ராதா எல்லாச் சொத்தையும் தனக்கே கொடுக்கும்படி கேட்கவே, ஜமீன்தார் அப்படியே உயில் எழுதி வைக்கிறார்.

குழந்தைவேலுவின் போதனையால், ராதா, வேணுவை மானேஜர் பதவிலிருந்து நீக்கிவிட்டு, ராஜேந்திரனை அப்பதவியில் நியமிக்கிறாள். வீடு திரும்பிய வேணு தன் இடத்தில் ஒரு புதியவன் இருக்கவே தன் மனைவியைக் காரணம் கேட்கிறான்? தன் மனைவியே தனக்கு எதிராக இருப்பதைக்கண்டு மனம் வருந்துகிறான்.

குழந்தைவேலுவும், அவன் தீய சகாக்களும் தொழிலாளர் பணத்தைச் சுருட்டப் பார்க்கிறார்கள் — வேணு தலையிட்டு தொழிலாளர்கள் நீதி பெறும்படி செய்கிறான்.

ஒரு நாள் இராஜேந்திரன் பணத்தை திருடிக்கொண்டு ஓட முயலும்போது, ஒரு முகமூடி அணிந்த மனிதன், அவனைத் தாக்கி, பணத்தைக் காப்பாற்றுவதோடு, படமெடுத்துவிடுகிறான்.

ஒரு நாள் வீட்டில் உணவு அருந்திக்கொண்டிருந்த வேணுவை "என் உப்பைத்தின்று எனக்கே துரோகம் செய்கிறாய்"

என்று ராதா ஏசவே, தன்மானமுள்ள வேணு வீட்டை விட்டு வெளியேறுகிறான்.

வருந்தத்தக்க இந்நிகழ்ச்சியைக் கண்ட ஜமீன்தார், ராதா பெயரில் தான் எழுதிய உயில்தான் எல்லாவற்றிற்கும் காரணம் என எண்ணி, அந்த உயிலை இரகசியமாய் மாற்றிவிடுகிறார்.

இராஜேந்திரனின் கயமைக் கண்கள் இராதாவைச் சுற்றிக் கொண்டே இருந்தன. இராதாவிடம் தன் இச்சையை செயற்பட முயலும்போது, முகமூடி அணிந்த அதே மனிதன் அவளைக் காப்பாற்றுகிறான்.

உயில் மாற்றப்பட்டதற்கு வேணுதான் காரணம் எனத் தூபமிடுகிறான் குழந்தைவேலு சௌந்திரத்திடம். வேணுவை அடியாள் வைத்து நையப்புடைப்பதற்கு சௌந்திரத்தின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு வெளியேறுகிறான்.

இதற்கிடையில் ஜமீன்தாரின் தங்கை, வேணுவின் மூலம் கொடுத்தனுப்பிய ரூபாய் பத்தாயிரம் கிடைக்கப்பெற்றதை தெரிவிக்கிறாள். உண்மையறிந்த ராதா, தன் கணவனைக் காப்பாற்ற ஓடுகிறாள் ?...............

ராதா தன் கணவனைக் காப்பாற்றி நல்வாழ்வு பெற்றாளா ?

சுகுணா மாலையிட்ட மணவாளனைக் கண்டுபிடித்து மறு வாழ்வு பெற்றாளா ?

முகமூடி அணிந்த மனிதன் யார் ?

சுகுணா அளித்த புகைப்படத்தின் உரிமையாளன் யார் ?

இவ் வினாக்களுக்கு வெண்திரையில் விடை காணுங்கள்.

பாட்டுகள்

1

ஆ : அடியேன் கேள்விக்கு இப்போ
அழகாக நீ பதில் தெரிவிப்பாய்
ஜெயித்திடுவாய் கெலித்திடுவாய்
ஓஹோ சின்ன ராணி.

பெ : எதையுங் கேளு நீ சமத்தாய்
என்னிடத்தில் பதில்தான் இருக்கு
ஜெயிக்கிறேனே கெலிக்கிறேனே
ஓஹோ செல்ல ராஜா

ஆ : ஒற்றைக் காலின் மேல் நின்று
ஹடயோக முத்ரையுங் கொண்டு
சட்டுனு தன்பசி தீர்க்குங் குருடன்
விவரந் தேவை யாரது.

ஆ. கோ : அய்யா கேள்விக்கு இப்போ
அழகாக நீ பதில் தெரிவிப்பாய்
ஜெயித்திடுவாய் கெலித்திடுவாய்
ஓஹோ சின்ன ராணி.

பெ : மூக்கு மூணடி தோணும்
அதை கொக்குனு பெயர் சொல்ல வேணும்
போலி ஜெபமின்னு ப்ரஸித்தி யாக்கும்
பொய்யினு சொல்ல ஆகுமோ

பெ. கோ : எதையுங் கேளு நீ சமத்தாய்
இவளிடத்தில் பதில் தான் இருக்கு
ஜெயித்திடுவாள் கெலித்திடுவாள்
ஓஹோ செல்ல ராஜா

ஆ : வாயு வேகமதை மிஞ்ச
லோகங் கண்டே தானஞ்ச
கடிது ஓடுது கண்டு சொல்லிடு
விழிக்காதே நீ ஏதது

ஆ. கோ : அய்யா கேள்விக்கு இப்போ
அழகாக நீ பதில் தெரிவிப்பாய்
ஜெயித்திடுவாய் கெலித்திடுவாய்
ஓஹோ சின்ன ராணி.

பெ : ராக்கெட்டெனச் சொல்லு வேனோ
இல்லை ஸ்பூட்னிக் கெனச் சொல்லுவேனோ
உம் போல் இளைஞர் மனஸாகும்
இதை முந்திட உலகில் ஈடில்லை.

பெ. கோ : எதையும் கேளு நீ சமத்தாய்
இவளிடத்தில் பதில்தான் இருக்கு
ஜெயித்திடுவாள் கெலித்திடுவாள்
ஓஹோ செல்ல ராஜா

ஆ : தானமிட்டுக் கெட்ட தெவரோ

பெ : கர்ணனோ

பெ. கோ : கர்ணனே

ஆ : தப்பு தப்பு பலிச் சக்ரவர்த்தி

ஆ கோ : ஹோய் பலிச் சக்ரவர்த்தி

ஆ : சூதாட்டத்தில் நிபுணர் எவரோ

பெ : தர்மனோ

பெ. கோ : தர்மனே

ஆ : தப்பு தப்பு சகுனி

ஆ. கோ : ஹோய் சகுனி

ஆ : அண்ணன் தம்பி தன் போராட்டமிடை
சென்றொளிந்து நின்று கொன்றது எவரோ

பெ : பீமனோ

பெ. கோ : பீமனே

ஆ : தப்பு தப்பு ராமனே

ஆ. கோ : ஹோய் ராமனே, ஸ்ரீ ராமனே ஸ்ரீ ராமனே

2

என் கிளி சொல்லிடு — எங்கிருக்கேன்
இவனை பிடித்தாயோ —, நீ இவனை பிடித்தாயோ

காட்டிலா நடுக் காட்டிலா
கூட்டிலா கிளிக் கூட்டிலா
புதரிலோ பூம் புதரிலோ
புகுந்துதான் நான்இருக்கிறேன்
அறிந்து கொள் நீ எந்தன் பெண்ணழகே

ஆசையாய் வலை வீசியே
நேசமாய் பரிகாசமாய்
தேடுதோ உளம் நாடுதோ
ஓடியே விளையாடவே
ஆருயிர் மோஹத்தில் ஆடிடுதா

விலகியே நான் ஒளிந்ததால்
மருகியே நீ மயங்கிறாய்
இதயமே என் உயிர் நிலை
தனையலால் இனி வேறிலை
என்னகந் தனில் நிதம் வாழுகிறாய்.

3

சேர்ந்து கை கலந்ததும் சப்திக்கும்
மனசுகள் கலந்ததும் தித்திக்கும்

கண்களைப் பார்த்தே பொங்கிய உள்ளம்
காதல் தேவி புகழ் பாடும்

பாலுந் தேனுங் கலந்தது மாதிரி
ஆணும் பெண்ணுங் கொண்டாடி
உண்மையில் இங்கே ஒன்றாய் சேர்ந்திடில்
ஜம்முனு புருஷன் பெண்டாட்டி

கோடி கோடி கொண்டாலும் நெஞ்சிலே
கோரிய மனைவிக்கே ஈடிலை
கோதை தன் முகம் சந்திரவடிவம்
கொஞ்சிடுங் காதல் இந்நாளிலே

வீசிடு தென்றலின் வெறியும் கொள்ள ஓர்
போதை மீறியே வந்தாச்சு
அன்யோன்யந்தான் தம்பதிக் கமுது
கன்னலை மிஞ்சிய தேனாச்சு

4

பெண் :

இந்த சீமானுக்கு
பெண்வாடை பொல்லாதா
எதுக்கு மனங்கண்ணாளா — என் மனம்
அறிந்து மகிழ் கண்ணாளா

மயக்கு மொழிப் பேச்சு வீணான பாசாங்கு
மங்கை வந்தாலே ஏனிந்த மௌனம்

ஆண் : ஆசை மேலானால் காதல் குணம் மாறு
கோபதாபங்கள் தான் வந்தே மீறும்

பெண் : கொஞ்சல் செய்திடு மழகு
நெஞ்சில் காதலை அனுவும்
குலவ கணமேனும் என்னைப் பாரும்
கண்ணாளா

ஆண் : ஏனோ ஸ்ரீமதிக்கி வீண் பேச்சு விவாதம்
அதுதான் பலே வைபோகம் — நின் மனம்
பெண்கள் மனக்கண்ணின் வேகத்தை
கண்கள் பேசும்
காதலின்பங்கள் என்றால் நாளும்

பெண் : தெரிந்து கொண்டீர்கள்
ஏனின்னும் பேசாமல் — தென்றல்
தேனாடும் பூவில் மருவாமல்

ஆண் : கலையின் ரதியே போதும்
கனல் வேதனை மீறும்
கனிந்து உறவாட
தடையேது வாராயா

ஆண், பெண்: மோக நிலை எல்லாம்
அழியாத விநோதம்
ஜெக மேல் பெரும் விநோதம்
இதுவே பலே விநோதம்.

5

மனம் போல இன்பமுண்டு
சுவை காணுங்காதலுண்டு
தேமாங்கனி கோவாக்கனி
திரும்பாதே என்னைக்கண்டு

தினைமாவுந்தேனுமுண்டு
தெவிட்டாத போதை கொண்டு
எனைக் கொஞ்சிடுமையல் தந்திடு
இது நேரம் ஓடி வந்து

விழியோடு பேசுங்காதல்
கலை இன்பங்கண்டபோதே
அலை பாயுதே சுவை பொங்குதே
நிலையான ஆசை போலெ

கனிவின்ப நேசமூட்டி
புவியன்பு ஊடல் கூட்டி
இளவாலிப எழில் மோகமே
கரை சேரு ஆசை யூட்டி.

6

பலே சான்சு டேய் — பலே சான்சு டேய்
லல்லல்லா, லல்லல்லா — லக்கி சான்சு டேய்
இந்த இடம் ஓர் சொர்க்கம் டேய்
இதை அனுபவித்திலே தெரியனுன டேய் — பலே

அத்தை மாமனுக்கு பொண்ணு ஒண்ணுடோய்
அதிர்ஷ்ட யோகம் அது டேய்
மாமி மனையிலே நீயொன்றே
எல்லாம்உனதே தான் அதிகாரம் — பலே

கஞ்சி ஊத்தினா அமுதம் என்றே
கம்முனு குடிச்சிட்டு தூங்கு — பலே
ஜம்முனு குடிச்சிட்டு தூங்கு
சீ! சா! என்றால் நிதானம் பெறுடா
துணிவு நெஞ்சு கொள்ளு மன்னன் மாதிரி — பலே

சூடுபட்டு கொண்டு வெளியில் நீங்கினா
சோர்வுமீறி உடன் விலகாதே
கூசிடும் பேச்சுகள் தினங்காதில் விழும்
ஆசி ஊரையார் நினைச்சே வாழ்ந்திட — பலே

இணங்கி வணங்கி ஒண்ணா வாழ்ந்தால்
எல்லாம் வருதே தன்னாலே
மாமனும் பணம் கூட்டி வச்சதே
வருதே நாளை செத்தாலே — அது
வருதே நாளை செத்தாலே — இனி
வருதே அது வருதே
வருதே — வருதே ...

7

நினைவில் வேல் வீசுங் கண்ணுடையாளே
ஒய்யார ஹம்சத்தின் நடையாளே
என்னகத்தினுள் ஒளிர் புன்னகையாளே
கொவ்வை குறு குறு நகைதனை அறிந்து கொண்டே
தவிக்குது என் மனது — உன்னழகை
நினைத்தே ஏங்கிடுது — நினைவில்

தவறென்றே எண்ணிக் கொண்டு நீயோ
பிழை என்றே பார்க்க மறுத்தாயோ
தவறென்றே எண்ணிக் கொண்டு நீயோ
பார்க்க மறுத்தாயோ — எண்ண மதை புரியாயோ
விரைந்தே இதோ இன்று ஓடிப் போனாயோ
கொவ்வை குறு குறு நகைதனை அறிந்து கொண்டே
தவிக்குது என் மனது — உன்னழகை
நினைத்தே ஏங்கிடுது

உன்னைக் கண்டே இன்று தொடர்ந்தேனே
என்னைச் சேர சமயமிது தானே
உன்னைக் கண்டே இன்று தொடர்ந்தேனே
சமயமிது தானே — நானுன்னை பிரியேனே
வெறுத்தேகினாலே வேதனை தானே
கொவ்வை குறு குறு நகைதனை அறிந்து கொண்டே
தவிக்குது என் மனது — உன்னழகை
நினைத்தே ஏங்கிடுது

மறந்தாயே புருஷனை தானே
மனங் கொண்டால் நானுனக்குத்தேனே
மறந்தாயே புருஷனை தானே நானுனக்குத்தேனே
கோபமே ஏன் மானே — தன்னோடு பேசிட மோகங்
கொண்டேனே
நினைவில் வேல் வீசுங்கண்ணுடையாளே
ஒய்யார ஹம்சத்தின் நடையாளே
என்னகத்தினுள் ஒளிர் புன்னகையாளே
கொவ்வை குறு குறு நகைதனை அறிந்து கொண்டே
தவிக்குது என் மனது — உன்னழகை — உன் நடையை
உன் பிகுவை நினைத்தே ஏங்கிடுது. — நினைவில்

சோமசுந்தரம் அச்சகம் — கோயமுத்தூர்

சோமசுந்தரம் அச்சகம் - கோவை.